திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு.லி.மதுபாலன் இ.ஆ.ப.,

ந.க.எண் எப்1/2713/2025/வா.கு.அ.5 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

நாள் 03 .11.2025

பொருள் மனைப்பிரிவு – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் 5 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), **பாண்டமங்கலம் கிராமம், பழைய சர்வே எண்கள்** 88/1C, 88/1D, **புதிய வார்டு I, பிளாக் எண் 6, நகரளவு எண்கள் 15/20, 15/21ல் கட்டுப்பட்ட 4057 ச.மீ. (1.00 ஏக்கர்)** பரப்பளவு கொண்ட இடத்தில், புதிதாகக் குடியிருப்பு **மனைப்பிரிவு** அமைக்க தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டது – அங்கீகாரம் செய்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் உத்தரவு CX8DV6TE/42302/2025/2025/TCP, நாள் 17.03.2025.
2. ஆணையர் அவர்களின் ஒப்புதல், நாள் 25/10/2025
3. மாமன்றத் தீர்மான எண் 807, நாள் 31.10.2025

****

உத்தரவு

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), **பாண்டமங்கலம் கிராமம், பழைய சர்வே எண்கள்** 88/1C, 88/1D, **புதிய வார்டு I, பிளாக் எண் 6, நகரளவு எண்கள் 15/20, 15/21ல் கட்டுப்பட்ட 4057 ச.மீ. (1.00 ஏக்கர்)** பரப்பளவு கொண்ட இடத்தில், புதிதாகக் குடியிருப்பு **மனைப்பிரிவு** அமைக்க, **ம.வ. / ந.ஊ.இ.இ. (திமா) எண் 55/2025 என எண்ணிடப்பட்டு** தொழில்நுட்ப ஒப்புதலும், மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு 35/2025 **என எண்ணிடப்பட்டு** திட்ட **அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.**

அதனைத் தொடர்ந்து, மேற்படி உத்தேச மனைப்பிரிவின் வரைபடத்திற்கும், அசல் தானப்பத்திரத்திற்கும், பார்வை (3)ல் காணும் மாமன்றத் தீர்மானத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வுத்தரவில் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள், வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கீழ்க்காணும் கூடுதல் நிபந்தனைகளுக்குட்பட்டு, மனுதாரர்களிடமிருந்து பெறப்பட்ட **பிழைதிருத்தல் ஆவண** எண் 1182/2025, நாள் 13.03.2025ன் அடிப்படையில் மேற்கண்ட அனுமதி உத்தரவு அங்கீகரிக்கப்படுகிறது.

கூடுதல் நிபந்தனைகள்

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் **ந.க.எண்** CX8DV6TE/42302/2025/2025/TCP, நாள் 17.03.2025**ன்** தேதிய செயலாணையில் கண்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.
2. குடியிருப்பு மனைப்பிரிவில் கட்டடம் கட்டும் முன் சாலை மட்டத்திற்கு மனையில் மண் நிரப்பி உயர்த்த வேண்டும்.
3. குடியிருப்பிற்காக ஒதுக்கப்பட்ட மனையில் குடியிருப்புக் கட்டடம் மட்டுமே கட்டப்பட வேண்டும். கடைக்காக ஒதுக்கப்பட்ட மனையில் வணிக கட்டடம்

மட்டுமே கட்டப்பட வேண்டும். மாநகராட்சி சட்டப்படி உரிய விண்ணப்பங்கள் சமர்ப்பித்து கட்டட மற்றும் திட்ட அனுமதி பெற்ற பின்பே கட்டடம் கட்டப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவிலுள்ள **சாலைகள், மூலைமுடக்குகள் மற்றும் உள்ளாட்சிக்கான இடம் ஆகியவை, மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டதால், மனுதாரர்கள், இவ்விடத்தில் எவ்வித உரிமையும் கோர இயலாது.** (பொது ஒதுக்கீட்டிற்கென உரிய தொகை, OSR Fees எனும் தலைப்பில், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது).
5. மனைப்பிரிவு வரைபடத்திலுள்ள அளவுகளின்படி தான் மனைகள் கிரயம் செய்யப்பட வேண்டும்.
6. மனை அபிவிருத்தி காலத்தில் மழைநீர் வடிகால் அமைப்புகளைத் தவறாமல் அமைக்க வேண்டும்.
7. மனைப்பிரிவிலுள்ள தெருவிளக்குகள் தொடர்பாக மாநகராட்சியில் செலுத்திய தொகைக்குமேல் மின்வாரியத்தால் கூடுதல் தொகை நிர்ணயம் செய்யப்பட்டால், அந்த கூடுதல் வித்தியாசத் தொகையினையும் மனுதாரர்களே செலுத்த வேண்டும்.
8. மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட நாளிலிருந்து உரிய அனுமதி பெற்று கட்டடம் கட்டும் வரை காலிமனை வரி செலுத்தப்பட வேண்டும்.
9. மனைப்பிரிவில் மழைநீர் வடிகால் அமைப்புகள், மாநகராட்சி பொறியாளர்களின் ஆலோசனைப்படி அமைக்கப்பட வேண்டும்.
10. மாநகராட்சியின் அனுமதியின்றி எவ்வித மாறுதலோ மற்றும் பாதையினை மறித்து கதவோ (Gate) அமைக்கக் கூடாது.
11. **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12843/2022/டிபி2, நாள் 20.10.2022ல், "மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை 5 வருடங்கள் அல்லது 60% மனைகள் அபிவிருத்தி அடைந்தபின், இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாகப் பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர், மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும். பராமரிப்புப் பணிகளுக்கான திரும்பச் செலுத்தக்கூடிய வைப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம்), ஒரு வக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு எனக் கணக்கிட்டுவசூலிக்கப்பட வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தங்களிடமிருந்து, திரும்பச் செலுத்தக்கூடிய வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- மட்டும் வசூலிக்கப்பட்டுள்ளது.**

ஆணையருக்காக

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

03/11/2025

பெறுநர்

திரு.S.ஜானராஜ் மற்றும் திரு.G.டேவியல் சாலமோன்,
5 - முத்து அவின்யூ, சீனிவாச நகர் 5வது மெயின் ரோடு,
புத்தூர், திருச்சி - 620 017.

நகல் - உதவி ஆணையர், வார்டு குழு அலுவலகம்-5, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி